20.03.2025 S.C.No.138 of 2017 P.W.14 – Ravi

(A1 to A6 present)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.40 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கேள்வி: அ.த.சா.ஆ.3 ல் உள்ள பெருவிரல் பதிவு யார் வாங்கியது என்றால்?

பதில்: நான்தான் வாங்கினேன்.

கேள்வி: ஒரு ஆவணத்தில் பெருவிரல் பதிவு பெற்ற பிறகு அதை எப்படி எழுதிக்கொள்ள வேண்டும் என்றால்?

பதில்: பெருவிரல் ரேகை பெற்ற பிறகு அதில் யாருடைய பெருவிரல் ரேகை என்று எழுதி ஆவணப்படுத்த வேண்டும்.

கேள்வி: அ.த.சா.ஆ.3 ல் பெருவிரல் பதிவு யாருடையது என்று எழுதியுள்ளது என்றால் ?

பதில்: எவருடைய பெருவிரல் ரேகை என்று எழுதப்படவில்லை.

கேள்வி: ஆங்கிலத்தில் அதை எவ்வாறு எழுத வேண்டும் என்றால் ?

பதில்: ஆங்கிலத்தில் Short ஆக LTF (Left Thump Finger) என்று எழுதப்பட்டுள்ளது.

கேள்வி: LTF (Left Thump Finger) என்றுதான் உள்ளது என்றும் LTI (Left Thump Impression) என்று இல்லை என்றும் எனவே அந்த LTF–ஐ நானே எழுதிக்கொண்டேன் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: 16.06.2015 அன்று இரவு 01.00 மணி வரை 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வரவே இல்லை என்பதை கௌஷ் பாஷா அ.சா.2 அவர் நீதித்துறை நடுவர் எண்.5 பொறுப்பு அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார் அதனால் தாங்கள் 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ்

16.06.2015 அன்று நிலையம் வந்ததாகவும் ஷமீல் பாஷாவை விசாரித்ததாகவும் பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் என்றால் ?

பதில்: 16.06.2015 அன்று மாலை 04.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு மார்டின் பிரேம்ராஜ் வந்து ஷமீல் பாஷாவை விசாரித்து மீண்டும் விசாரிக்கிறேன் இருக்கட்டும் என்று சொன்னார்.

கேள்வி: சிபிசிஐடியிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் 16.06.2015 அன்று மார்டின் பிரேம்ராஜ் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ?

பதில்: சொன்னேன். ஆனால் அந்த வாக்குமூலத்தில் அவ்வாறு பதியவில்லை.

கேள்வி: அப்படியானால் நான் சொன்னதை எழுதாமல் சிபிசிஐடி போலீசார் நான் சொன்னதை மாற்றி எழுதியிருக்கிறார்கள் என்றால் ?

பதில்: தெரியாது.

கேள்வி: நீங்கள் சிபிசிஐடியிடம் சொன்னதாக சொல்வதும் பொய் என்றும் 16.06.2015 1ம் எதிரி காவல் நிலையத்திற்கு வந்ததாகவும் விசாரித்ததாகவும் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியதும் பொய் என்றும் அதனால் வேண்டுமென்றே வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: கௌஷ் பாஷா நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் கடைசியில் அதனால் இன்ஸ்பெக்டர் மார்டின் பிரேம்ராஜ் வந்து விசாரிப்பார் என்று சொல்லி எனது மருமகனை உள்ளே உட்கார வைத்துள்ளார். அங்கேயே இரவு 01.00 மணிவரை இருந்தோம். ஆனால் இன்ஸ்பெக்டர் அங்கு வரவில்லை என்று

மேற்படி கௌஷ் பாஷா நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ளது என்றால் ?

பதில்: அவ்வாறு உள்ளது. ஆனால் கௌஷ் பாஷாவிற்கு இன்ஸ்பெக்டர் வந்தது தெரியாது.

கேள்வி: ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு வந்ததை நிலைய பதிவேடுகளில் எதில் பதிந்துள்ளோம் என்றால் ?

பதில்: ஆய்வாளர் உத்தரவு இல்லாமல் எந்த பதிவேட்டிலும் பதிவிட முடியாது.

கேள்வி: ஆய்வாளர் உத்தரவு இல்லாமல் எந்த பதிவேட்டிலும் பதிவிட முடியாது என்பதை எந்த சட்டப்படி கூறுகிறீர்கள் ?

பதில்: சட்டப்படி இல்லை.

கேள்வி: மேற்படி கௌஷ் பாஷாவின் வாக்குமூலத்தில் "ஷமீல் பாஷாவை எங்களுடன் போலீசார் அனுப்பிவைக்க மறுத்தார்கள்" என்று இருக்கிறதா என்றால்?

பதில்: இருக்கிறது. ஆய்வாளர் தான் வந்து விசாரிப்பதாக சொல்லி அனுப்பும்படி உத்தரவிடவில்லை.

கேள்வி: உத்தரவிடவில்லை என்பதை எந்த ஆவணத்திலாவது பதிவு செய்துள்ளீர்களா?

பதில்: எதிலும் பதிவிடவில்லை.

கேள்வி: Woman missing case dairy–ஐ சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா ?

பதில்: கொடுத்தேன்.

கேள்வி: Woman missing case dairy–ஐ சிபிசிஐடியிடம் கொடுத்தேன் என்ற விவரத்தை உங்களது சிபிசிஐடி கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறீர்களா?

பதில்: இல்லை.

கேள்வி: அ.த.சா.ஆ.37 ல் ஏதாவது ஒரு இடத்தில் 1ம் எதிரி மார்டின்

பிரேம்ராஜ் விசாரிப்பதாக சொல்லி ஷமீல் பாஷாவை நிலையத்தில் வைத்திருக்க சொன்னார் என்று உள்ளதா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: ஷமீல் பாஷாவை 16.06.2015 இரவு காவல் நிலையத்தில் வைத்திருந்தது குறித்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்யாமல் உள்நோக்கத்துடன் சட்டப்படி பதிவு செய்ய வேண்டியதை தவிர்த்திருக்கிறீர்கள் என்றால் ?

பதில்: ஆய்வாளர் ஜிடி என்ட்ரி போட சொல்லவில்லை. அதனால் போடவில்லை.

கேள்வி: 16.06.2015 அன்று பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள குறிப்புகள் அனைத்தும் ஆய்வாளர் சொன்னதால் எழுதியிருக்கிறோம் என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறீர்களா ?

பதில்: அந்த மாதிரி குறிப்புகள் ஏதும் எழுதப்படவில்லை.

கேள்வி: அதனால் தாங்கள் பணியாற்றிய காலத்தில் 1ம் எதிரி தங்களை எஸ்எஸ்ஐ என்று அழைக்காமல் இருந்ததை மனதில் வைத்துக்கொண்டு தற்போது இந்த நீதிமன்றத்தில் அவரை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: பொய்யாக நான் எதையும் சொல்லவில்லை.

கேள்வி: 16.06.2015 அன்று எத்தனை மணிக்கு பணி முடித்து ரெஸ்ட்–ல் போவதாக பதிவு செய்திருக்கிறீர்கள் ?

பதில்: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய மூன்று தேதிகளில் எனக்கு ஜிடி பொறுப்பு தரப்பட்டிருந்ததால் இரவு ரோந்து பணி பார்த்துவிட்டு இரவில் ஜிடி பணியும் பார்த்துக்கொண்டிருந்ததால் பகலில் ஓய்வுக்கும் குளித்துவிட்டு வருவதற்கும் வீட்டிற்கு சென்றுவிட்டு பின்னர் வருவேன். இதுதான் நடைமுறை. அதை

பதிவு செய்ய முடியாது.

கேள்வி: 16.06.2015 பொது நாட்குறிப்பில் எத்தனை மணிக்கு நிலையத்திற்கு சென்றிர்கள் மீண்டும் எத்தனை மணிக்கு நிலையத்திற்கு வந்தீர்கள் என்று பதிவு இல்லை என்றால் ?

பதில்: குளிப்பதற்கும், ஓய்வுக்கும் வெளியில் பக்கத்தில் லாட்ஜில் ரூம் எடுத்து 2 மணி நேரம் இருந்துவிட்டு வருவேன்.

கேள்வி: மேற்கண்ட தகவல்களை பொதுநாட்குறிப்பில் குறிப்பிட்டீர்களா ?

பதில்: குறிப்பிட்டு எழுதவில்லை.

கேள்வி: காவல் நிலையத்தில் ஓய்வறை உள்ளதா?

பதில்: உள்ளது. அதில் குளிக்க போதிய வசதியில்லை.

கேள்வி: உங்களுடைய முதல் விசாரணையில் பக்கம் 6 ல் 2 வது பாராவில் "காவல் நிலைய பாரா காவலர் சீனிவாசனையும் முத்துக்குமரனையும் ஷமீல் பாஷாவையும் போலீரோ வண்டியில் ஒரு நபரையும் காணோமே என்ன ஆனது என்று கேட்டேன்" என்று உள்ளது. தற்போது 17.06.2015 பொதுநாட்குறிப்பில் அது குறித்து பதிவு செய்திருக்கிறீர்களா?

பதில்: பதிவு செய்ய உத்தரவிடவில்லை. அதனால் பதிவு செய்யவில்லை.

கேள்வி: பொதுநாட்குறிப்பில் மேற்கண்ட தகவலை பதிவு செய்வதற்கு எவருடைய ஆணையும் தேவையில்லை அதை தெரிந்திருந்தும் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

பதில்: சரியல்ல. காவல் நிலையத்தின் ஆய்வாளரே அனைத்து பொறுப்பு அதிகாரியாவார்.

கேள்வி: தங்களின் முதல் விசாரணையில் பக்கம் 6 ல் பாரா 2 ல் நடுவில் "காவல் நிலையத்திலிருந்து பிரிகேடர் சிவானந்தத்தை நான் கேட்டபோது 1 ம் எதிரி ஷமீல் பாஷாவையும் பொலிரோ வண்டியில் வந்த நபரையும் காவலர் குடியிருப்பில் வைத்து

விசாரிப்பதாக சொன்னார்" என்று கூறியிருக்கிறீர்கள். இதனை நிலையத்தில் உள்ள ஏதேனும் ஒரு ஆவணங்களில் பதிவு செய்திருக்கிறீர்களா ?

பதில்: எந்த ஆவணத்திலும் பதிவு செய்யவில்லை.

கேள்வி: கௌஷ் பாஷா நீதித்துறை நடுவர் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தில் ஷமீல் பாஷாவை வெளியே அழைத்துச்செல்லவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் அதை அறிந்திருந்தும் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

பதில்: சரியல்ல. ஆய்வாளர் ஷமீல் பாஷாவை அழைத்து செல்வது கௌஷ் பாஷாவிற்கு எப்படி தெரியும். அவருக்கு தெரிய வாய்ப்பில்லை.

கேள்வி: ஷமீல் பாஷா இருப்பிடம் குறித்து தாங்கள்தான் சீனிவாசனிடம் கூறியதாக சீனிவாசன் அவரது முதல் வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார் ஆனால் சீனிவாசன் சொன்னதாக இந்த நீதிமன்றத்தில் தாங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

பதில்: சரியல்ல.

கேள்வி: தங்களால் குறிப்பிடப்படும் முத்துக்குமரன் அவரது முதல் விசாரணையில் காவல் ஆய்வாளர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வரவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் தாங்கள் வந்ததாக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: முத்துக்குமரன் அ.சா.17 அவரது முதல் விசாரணையில் பக்கம் 3 ல் " 17.06.2015 அன்று நான் காவல் நிலையத்திற்கு பணிக்கு வந்தேன் அப்போது ஷமீல் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார்.

நான் திரு.ரவி சிறப்பு உதவி ஆய்வாளரை கேட்டபோது காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வரவில்லை" என்று குறிப்பிட்டு கூறியுள்ளார். ஆனால் தாங்கள் இந்த நீதிமன்றத்தில் ஆய்வாளர் 16.06.2015 மற்றும் 17.06.2015 வந்ததாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: 17.06.2015 அன்று காவல் ஆய்வாளர் இரவு 09.00 மணி வரை நிலையத்திற்கு வரவில்லை என்று கௌஷ் பாஷா அ.சா.2 அவரது வாக்குமூலத்தில் ( JM5)–யிடம் கூறியிருக்கிறார். ஆனால் வேண்டுமென்றே ஆய்வாளர் நிலையம் வந்ததாகவும் ஷமீல் பாஷாவை விசாரித்ததாகவும் நீங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல. 17.06.2015 காலை 09.30 மணிக்கு ஆய்வாளர் காவல் நிலையம் வந்தார்.

கேள்வி: மேற்கண்ட தங்களின் பதிலின் படி 17.06.2015 காலை 09.30 மணிக்கு காவல் ஆய்வாளர் நிலையம் வந்ததாக தங்களது பொதுநாட்குறிப்பில் எழுதியிருக்கிறீர்களா என்றால் ?

பதில்: எழுதவில்லை.

கேள்வி: ஆம்பூர் தாலுக்கா காவல் நிலைய செண்ட்ரி புக்–ல் குற்ற எண் 208/2015 ல் (16.06.2015 முதல் 18.06.2015) மார்டின் பிரேம்ராஜ் மற்றும் வழக்கின் எதிரிகள் அனைவரும் சேடோ டியூட்டியில் 17.06.2015 அன்று 09.10 முதல் 03.10 வரை பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை மேற்கண்ட ஆவணம் கூறுகிறது என்றால்?

பதில்: ஆமாம். அதற்கான ஒளிநகல் ஆவணத்தை பார்த்து சாட்சி ஒத்துக்கொள்வதால் அந்த ஆவணம் எ.த.சா.ஆ.12. சேடோ

டியூட்டியில் இருப்பவர்களை பார்த்திருக்க சொல்லிவிட்டு அவர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்து செல்வார்.

கேள்வி: மேலே சொன்னவாறு 1ம் எதிரி சேடோ டியூட்டியில் இருக்கும்போது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்து சென்றதாக ஏதேனும் நிலையத்தில் உள்ள ஆவணங்களில் பதிவு செய்து வைத்திருக்கிறீர்களா ?

பதில்: அனைத்து கேள்விகளிலும் ஏன் ஆவணங்களில் பதிவு செய்யவில்லை என்றுதான் கேட்கிறீர்கள். ஆய்வாளரின் உத்தரவு இல்லாமல் பதிவு செய்ய இயலாது.

நீதிமன்ற மற்ற வழக்கு விசாரணைகள் உள்ளதாலும் அலுவல் சார்ந்த பணி உள்ளதாலும் சாட்சியின் குறுக்கு விசாரணை நாளை 21.03.2025 க்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் மாலை 04.11**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.20 17:33:42 +0530